| Article Date | Headline / Summary | Publication |
|---|---|---|
| 08 Feb 2026 | Medical expenses, theft, trip cancellation. Foreign travel insurance that can help with Many problems | Nanayam Vikatan |





# மருத்துவச் செலவு, திருட்டு, பயணம் ரத்து... பல பிரச்னைகளுக்கும் கைகொடுக்கும் வெளிநாட்டு பயணக் காப்பீடு!

இந்திய சுற்றுலா அமைச்சகத்தின் அறிக்கைப்படி, 2025 ஜூலை முதல் செப்டம்பர் மாதம் வரையிலான மூன்று மாத காலகட்டத்தில் 83.89 லட்சம் இந்தியர்கள் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்துள்ளனர். 2024-ம் ஆண்டின் இதே காலகட்டத்தில் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்தவர்கள் 76.90 லட்சம் பேர். 2025-ம் ஆண்டின் ஜூலை - செப்டம்பர் காலகட்டத்தின் வளர்ச்சி விகிதம்,

முந்தைய ஆண்டின் அதே கால கட்டத்தைவிட 9% அதிகம். இதன் மூலம், வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ளும் இந்தியர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவது தெளிவாகிறது.

இந்தியக் காப்பீட்டு மேம்பாட்டு ஆணையமான ஐ.ஆர்.டி.ஏ.ஐ (*IRDAI - Insurance Regulatory and Development Authority of India*) தகவலின்படி, இந்திய பயணக் காப்பீடு சந்தை வருடத்துக்கு 12% வளர்ச்சி கண்டு வருகிறது. இதற்கு முக்கியக் காரணம், பயணக் காப்பீட்டின் அவசியம் குறித்த விழிப்புணர்வு பெரும்பாலானோர்களுக்கு ஏற்பட்டு வருவதே.

**வெளிநாட்டுப் பயணக் காப்பீடு!**

விசா, விமானக் கட்டணம், ஹோட்டல் முன்பதிவு ஆகியவற்றுடன் சேர்த்து, வெளிநாட்டுப் பயணக் காப்பீடு (*International Travel Insurance*) வாங்குவது மிகவும் முக்கியமான ஒன்று. வெளிநாடு செல்லும்போது ஏன் பயணக் காப்பீடு கட்டாயம் என்பதைப் பார்க்கலாம். எந்த நாட்டுக்குச் சென்றாலும், எதிர்பாராத அவசர சூழ்நிலைகள் ஏற்படலாம். அப்படி ஏற்பட்டால் சமாளிக்கத் தயாராக இருப்பதே புத்திசாலித்தனம். அதற்குப் பயணக் காப்பீடு தேவை.

**மருத்துவ அவசர நிலைகள்!**

பயணத்தின்போது ஏற்படும் மிக முக்கியமான சில பிரச்னைகளில் மருத்துவ அவசரமும் ஒன்று. இந்தியாவுக்குள் பயணம் செய்தால், நாம் ஏற்கெனவே எடுத்து வைத்திருக்கும் மருத்துவக் காப்பீடு உதவும். ஆனால், வெளிநாடுகளில் பயணம் செய்யும்போது அந்தக் காப்பீடு கைகொடுக்காது. வெளிநாட்டுப் பயணக் காப்பீடு எடுப்பதுதான் அதற்கான தீர்வாக இருக்கும்.

இந்தியாவுடன் ஒப்பிடும்போது வெளிநாடுகளில் மருத்துவச் செலவுகள் மிகவும் அதிகம். சில நாள்கள் தங்கி சிகிச்சை எடுத்துக்கொள்ளவே, ரூ.10 லட்சம், ரூ.15 லட்சம் எனச் செலவாகும். இந்த அளவுக்கான தொகையை திடீரென ஒருவர் திரட்டுவது என்பது மிகவும் கடினம். அப்படியே திரட்டினாலும் வாழ்நாள் சேமிப்பு எல்லாம் காலியாகி, பெரும் கடனாளியாகும் நிலை பலருக்கு ஏற்பட்டுவிடும். எனவே, கூடுதல் செலவு எனப் பார்க்காமல், தகுந்த வெளிநாட்டுப் பயணக் காப்பீடு பாலிசியை எடுத்துவிடுவது பல வகையில் நல்லது.

பயணக் காப்பீடு என்பது மருத்துவமனை சேர்க்கை, மருத்துவர் ஆலோசனை, அவசர சிகிச்சை, ஆம்புலன்ஸ் கட்டணம் ஆகியவற்றை கவர் செய்கிறது. மேலும், தேவையெனில் மருத்துவ இடப்பெயர்வுக்கும் (*Medical Evacuation*) அனுமதிக்கிறது. சில காப்பீட்டு பாலிசிகளில் ஏர் ஆம்புலன்ஸ் (*Air Ambulance*) மற்றும் இந்தியாவுக்கு மீண்டும் அழைத்து வருதல் (*Repatriation*) போன்ற வசதிகளும் உள்ளன.

**பயணம் ரத்து மற்றும் தாமதம்!**

வெளிநாட்டு விடுமுறை பயணம் பல காரணங்களால் ரத்து செய்யப்படலாம். குறிப்பாக, தனிப்பட்ட உடல் நலம், திடீர் விபத்து, குடும்ப உறுப்பினர் திடீர் இறப்பு, இயற்கைப் பேரழிவுகள் ஆகியவற்றைச் சொல்லலாம். இவை அனைத்தையும் வெளிநாட்டுப் பயணக் காப்பீட்டு கவர் செய்கிறது.



**ராகேஷ் கௌல்,**
முதன்மை விநியோக அதிகாரி - சில்லறை வணிகம், பஜாஜ் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடெட்

**“விமான நிலையம், ஹோட்டல் போன்ற இடங்களில் பைகள் தொலைந்து போவதற்கும், திருடு போவதற்கும் வாய்ப்புள்ளது. பயணக் காப்பீடு எடுத்திருந்தால், தொலைந்த பைகளுக்கான இழப்பீடு கிடைக்கும்.”**



அதேபோல், வானிலை அல்லது தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவும் விமானங்கள் தாமதமாகலாம். ரத்து செய்யப்பட்ட பயணத்துக்கு, குறிப்பிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் செலவுகளைத் திரும்பப் பெற பயணக் காப்பீடு உதவும். மேலும், விமானக் கட்டணம், ஹோட்டல் வாடகை, டூர் பேக்கேஜ் செலவுகள் இழப்பீடாகக் கிடைக்கும். நீண்ட நேர தாமதங்களில் ஹோட்டல், உணவு, மாற்றுப் போக்குவரத்துச் செலவுகளுக்கும் இழப்பீடு உண்டு.

**பைகள் திருட்டு அல்லது தொலைந்து போவது!**

விமான நிலையம், ஹோட்டல் போன்ற இடங்களில் பைகள் தொலைந்து போவதற்கும், திருடு போவதற்கும் வாய்ப்புள்ளது. பயணக் காப்பீடு எடுத்திருந்தால், தொலைந்த பைகளுக்கான இழப்பீடு கிடைக்கும். மேலும், உடைகள், அத்தியாவசிய பொருள்கள் உள்ளிட்ட செல்வுக்குப் பணம் கிடைக்கும். சில பாலிசிகளில் மின்னணு சாதனங்கள் மற்றும் மதிப்புள்ள பொருள்களுக்கும் பாதுகாப்பு இருக்கிறது. இதில் இழப்பீடு, பாலிசியில் குறிப்பிடப்பட்ட வரம்புக்குள் மட்டுமே வழங்கப்படும்.

**தனிப்பட்ட பொறுப்பு!**

தற்செயலாக, பிறர் சொத்துக்கு சேதம் விளைவித்தல், மூன்றாம் நபருக்கு காயம் ஏற்படுத்துதல் போன்றவற்றால் வெளிநாடுகளில் சட்ட பிரச்னைகளும் வரலாம். சட்ட செலவுகளுக்கும் இந்தக் காப்பீடு மூலம் இழப்பீடு பெறலாம்.

**அரசியல் குழப்பம், இயற்கைப் பேரழிவுகள்!**

இன்றைய காலத்தில் அரசியல் கலவரங்கள் சாதாரணமாகி விட்டன. அதேபோல் நிலநடுக்கம், புயல் போன்ற இயற்கைப் பேரழிவு களும் பயணத்தை பாதிக்கலாம். இவற்றுக்கும் பயணக் காப்பீடு மூலம் இழப்பீடு பெறலாம்.

**துணை பாலிசிகள்!**

தேவையின் அடிப்படையில் துணை பாலிசிகளை *(Add-on)* எடுப்பது மூலம் கூடுதல் காப்பீடு வசதிகளைப் பெற முடியும். இந்தத் துணை பாலிசிகளுக்கு சிறிது கூடுதல் பிரீமியம் கட்டுவது மூலம், பாதுகாப்பான இடத்துக்கு இடம்பெயர்வு, அவசர மீட்பு வசதிகள் போன்றவற்றுக்கான செலவுகளை இழப்பீடாகப் பெற முடியும்.

**கூடுதல் நன்மைகள்!**

பாஸ்போர்ட் தொலைந்தால், தூதரக நடைமுறைகளில் உதவி, மாற்று பாஸ்போர்ட் பெற வழிகாட்டுதல், விபத்து மூலமான எதிர்பாராத உயிரிழப்பில் குடும்பத்துக்கு நிதி உதவி போன்ற கூடுதல் நன்மைகளும் பயணக் காப்பீடு எடுத்தால் கிடைக்கும்.

மேலும், பயணக் காப்பீட்டு பாலிசியில் நமக்குத் தேவையான *(Customisable)* கவர்களை மட்டும் தேர்வு செய்யலாம். அதன்படி, பிரீமியம் செலவும் நெகிழ்வாக இருக்கும். நிறைவாக, ஒரு முழுமை யான வெளிநாட்டுப் பயணக் காப்பீடு என்பது மருத்துவ பாதுகாப்பு, நிதி பாதுகாப்பு, மன நிம்மதி ஆகிய அனைத்தையும் வழங்குகிறது.

காப்பீட்டு பிரீமியம் செலவாகத் தோன்றினாலும், அதன் பயன்கள் செலவைக் காட்டிலும் பல மடங்கு அதிகம். அதனால், வெளிநாட்டுப் பயணத்தின்போது ஏற்படக்கூடிய அனைத்து அபாயங்களிலிருந்தும் பாதுகாப்பாக இருக்க, முழுமையான பயணக் காப்பீட்டைத் தேர்வு செய்வதே புத்திசாலித்தனம் மற்றும் லாபகரமாக இருக்கும்.